# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 13.08.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

(தூதரே!) என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் அருகில் இருக்கிறேன். பிரார்த்தனை செய்கின்றவர் என்னை அழைக்கின்ற போது நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழியைப் பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக) (2:187)

நோன்பு மற்றும் அதற்குரிய விளக்கத்தோடு சேர்த்து இந்த வசனத்தை இறைவன் கூறியுள்ளான். இறைவனின் அடியாராக மாறி ஒருவர் தமது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான காட்சிகளைப் பார்ப்பதற்கு ஒருவித விடா முயற்சி அவசியமாகும். ரமலானின் நோன்புகளும் விடா முயற்சியாகும். ஒரு முஃமின் நோன்பின் தத்துவத்தைப் புரிந்து நோன்பு நோற்க வேண்டும். நாம் இறைவனுக்காகத்தான் நோன்பு வைக்கிறோமே தவிர வெறும் பட்டினி கிடப்பதற்காக அல்ல என்பதை புரிந்து நோன்பு நோற்க வேண்டும். நோன்பின் கட்டளைகளை முழுமையாக அறிந்திருக்க வேண்டும்.

நோன்பு விடா முயற்சியும், கடின உழைப்பும் ஆகும். யாரும் பட்டினி கிடப்பதைப் பற்றி இறைவனுக்கு எந்த கவலையும் இல்லை. அதே போன்று வெளிப்படையான வணக்கங்களும் அவனுக்குத் தேவையில்லை. இந்த வசனத்தில் இறைவன் பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனையை அல்லாஹ் கேட்டு அதற்கு பதில் தருவதை சில நிபந்தனைகளுக்கு உட்படுத்தியுள்ளான். யார் என்னை எப்படி அழைத்தாலும், எந்த நிலையில் அழைத்தாலும் நான் உடனடியாக அவனுக்கு செவிசாய்த்து பதில் கூறுவதற்காகத்தான் அமர்ந்திருக்கிறேன் என்று கூறவில்லை. மாறாக, என் அடியார்கள் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று எதிர்பார்த்தால் அவர்களது முதல் கடமை எனது கட்டளைகளைக் கேட்டு அதன்படி முழு கீழ்படிதலுடன் செயல்பட வேண்டும். பிறகு இரண்டாவது நிபந்தனை **ஃபல் யுமினூ பீ** – என் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். இந்தக் கட்டளை முஸ்லிம்களுக்கு கொடுக்கப்பட்ட போதும், என் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். உங்களுக்கு என் மீது ஏற்கனவே உள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துங்கள். அதில் முன்னேற்றத்தைக் காணுங்கள் என்று இறைவன் கூறுகிறான். ஏனென்றால் ஈமான் என்பது ஒருமுறை மட்டும் நாவினால் நான் ஈமான் கொண்டேன் என்று சொல்வதற்குப் பெயர் அல்ல. மாறாக, இதில் முன்னேற்றத்தின் பக்கம் அடியெடுத்து வைக்க வேண்டும். இறை இருப்பின் மீது உறுதி கொள்வதில் முன்னேற்றம் இருக்க வேண்டும். இந்த முன்னேற்ற நிலை இருந்தால் தான் நேர்வழி பெற்றவர் என்று ஒருவரை கூற முடியும். அப்போது தான் ஒரு உண்மையான முஃமினுக்கு கிடைக்கின்ற உயர் பதவிகள் கிடைக்கும்.

**ல அல்லஹும் யர்ஷுதூன் (2:187)** என்பதன் உண்மையான பொருள், உண்மையான நன்மையிலும் நேர்வழியிலும் முன்னேறுதல் என்பதாகும். அந்த நேர்வழியிலும் முழுமையைத் தேட வேண்டும். இறைவனின் கட்டளைக்கு கீழ்படிதல் மற்றும் இறை இருப்பின் மீது கொண்ட நம்பிக்கை ஆகியவற்றில் முன்னேறுவது எப்படி? இதற்குரிய வழிகள் நமக்கு எப்படி கிடைக்கும்? இதை நமக்கு காட்டுவதற்காக தான் இறைவன் தனது வேதமாகிய திருக்குர்ஆனை வழங்கியுள்ளான். இதுவே எல்லா நேர்வழிகளையும் உள்ளடக்கிய வேதமாகும். இக்கருத்தை இறைவன் திருக்குர்ஆனின் தொடக்கத்தில் இவ்வாறு கூறியுள்ளான். இதுவே முழுமையான வேதநூலாகும். இதில் எவ்வித ஐயமும் இல்லை. இதில் இறையச்சம் கொண்டவர்களுக்கு நேர்வழி உண்டு. (2:3)

நேர்வழியைத் தேடுகின்றவர்கள், இறைவனின் மீது தாம் கொண்ட நம்பிக்கையை உறுதிப்படுத்த விரும்புகின்றவர்கள், நன்மையின் உச்சத்தை அடைய விரும்புகின்றவர்கள், தாம் செய்கின்ற துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று விரும்புகிறவர்கள் ஆகியவர்களுக்கு இந்த முழுமையான வேத நூலைத் தவிர வேறு வழி ஏதுமில்லை. இந்த வேதம் முழுமையான மனிதரான ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறங்கியதாகும். எனவே இறைவனின் முழுமையான நல்லடியாராக ஆவதற்கு துஆக்கள் முழுமையாக ஒப்புக் கொள்ளப்படுவதற்கு இம்மையையும், மறுமையையும் சீர்திருத்துவதற்கு இறைவனின் கட்டளைகளின்படி செயல்படுவதை விட வேறு வழி ஏதுமில்லை. இதற்கான வழிகள் நமக்கு திருக்குர்ஆனை ஓதினால் தான் கிடைக்கும். இதற்கான முன்மாதிரி இறைவனின் தூய ரஸூல் (ஸல்) அவர்களின் தூய நடைமுறையில் தான் நமக்கு கிடைக்கும். **திருக்குர்ஆனின் செயல் வடிவம் தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கையாகும்.** இதன் பக்கம் வழிகாட்டியவாறு இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான். அல்லாஹ்வையும் மறுமை நாளையும் (சந்திக்கப் போவதை) எதிர்பார்த்து, **அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறுகின்ற உங்களுக்கு அல்லாஹ்வின் இந்த தூதரிடத்து மிக மேலான முன்மாதிரி உண்டு. (33:22)**

மறுமை நாளின் மீது ஈமானும் அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறுகின்றதும் இறைவனின் இந்த அன்பிற்குரிய ரஸூல் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றினால்தான் இறைவனின் பார்வையில் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாக அமையும். இவ்வாறு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுவதும் இந்த வசனத்தில் இறைவன் கூறியுள்ள கட்டளையின்படியே ஆகும்.

என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றி கேட்டால்....., உம்மிடம் என்னைப் பற்றி கேட்பவர்கள் என் அடியார்களாக இருந்தால், அவர்கள் உண்மையான முஃமின்களாக இருந்தால் நிச்சயமாக அவர்கள் உம்மிடம் தான் என்னைப் பற்றி கேட்பார்கள். ஏனென்றால் யாருக்கு வழி தெரியுமோ அவரிடம் தான் கேட்கப்படும். இறைவன் யாரை தன்னுடைய அன்பிற்குரிய ரஸூல் என்று கூறியுள்ளானோ அவரிடம் தான் இறைவனின் நேசத்தைப் பெற விரும்புபவர்கள் இறைவனைப் பற்றி கேட்பார்கள். இந்த ரஸூலைப் பற்றி இறைவன் கூறுகிறான். அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதற்கு இந்த ரஸூலைப் பின்பற்றுவது அவசியமாகும். இந்த மதிப்பிற்குரிய ரஸூலை விட்டு விட்டு வேறு ஒருவரிடம் இறைவனை அடையும் வழியைக் கேட்பதையோ அல்லது பிறரை தமக்கு முன்மாதிரி ஆக்கிக் கொள்வதையோ ஒரு முஃமின் சிந்தித்துக்கூடப் பார்க்க மாட்டார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நமக்கு முன்மாதிரியாக இருப்பவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் ஆவர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை உண்மையாக நேசித்த இக்காலத்தின் இமாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு முன்மாதிரி ஆவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு திருக்குர்ஆனின் கட்டளைகளைப் புரிந்து கொள்வதற்கும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அன்பில் நாம் நம்மை அர்ப்பணிக்கும் வழிகளையும் கற்றுத் தந்துள்ளார்கள். எனவே, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை அடிப்படையாகக் கொண்டுதான் அவர்கள் நமக்கு வழிகாட்டுகிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவனின் முழுமையான நல்லடியார் ஆவார்கள். இனி கியாமத் வரைக்கும் இவ்வாறான முழுமையான நல்லடியார் வேறு யாரும் தோன்ற முடியாது.

இறைவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்த்து கூறுகிறான். என்னுடைய அடியார்கள் என்னுடைய நெருக்கத்தையும் நேசத்தையும் பெறுவதற்காக நபியே உம்மருகே வந்து நான் எங்கே இருக்கிறேன்? என்று கேட்கிறார்கள். எனவே நான் அருகில் இருக்கிறேன் என்று நீர் அவர்களுக்கு கூறுவீராக. நான் அருகில் தான் இருக்கிறேன். ஆனால் என்னைப் பார்ப்பதற்கு ஏற்ற அறிவுக்கண் வேண்டும். அறிவும், பார்வையும் உங்களுக்கு வேண்டும் என்றால் நீங்கள் எனது அன்பிற்குரிய நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பேணி நடக்க வேண்டும். ஏனென்றால் அவர் தான் என்னுடைய போதனைகளை

முழுமையாக செயல்படுத்துபவர் ஆவார். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த நடைமுறைகளை எல்லாம் பார்த்து அதனை பின்பற்றியவர்களும் இந்த ரஸுலின் மீது உண்மையான நேசம் காட்டிய மக்களும் இறை நெருக்கத்தைப் பெற்று இறைவனின் உண்மையான அடியார் ஆகி விட்டனர். அவர்கள் இறைவனின் நெருக்கத்தின் காட்சிகளைக் கண்டனர். அவர்கள் என்னை அழைப்பவரின் அழைப்பிற்கு நான் பதில் தருகிறேன் என்று நான் கூறிய வார்த்தைகளின் சுவையை உணர்ந்தனர். தமது துஆக்களுக்கு இறைவனின் பதிலை செவியேற்றனர். இறைவனின் உதவிகளின் காட்சிகளைக் கண்டனர் என்று இறைவன் கூறுகின்றான். எனவே இன்றும் இறைவனைப் பற்றி கேள்வி கேட்பவர்களுக்கு 1400 வருடங்களுக்கு முன் கொடுக்கப்பட்ட அந்த பதில் தான் இன்றும் கொடுக்கப்படும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் இறைவன் எப்போதும் போன்று இன்றும் உயிரோடு இருக்கிறான். எப்போதும் அவன் உயிரோடு இருப்பவன் ஆவான். எனவே இப்போது தேவை என்னவென்றால் இறைவனின் கட்டளையைப் புரிந்து கொண்டு நடக்க வேண்டும். அவனது ரஸுல் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி நடக்க வேண்டும். இதன் மூலம் நம் நன்மைகள் வளர வேண்டும். நாம் நமது குறைகளை நீக்கவும், இறைவன் மீது ஈமான் அதிகரிக்கவும் வேண்டும். இதன் மூலம் துஆவின் தத்துவத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது முன்மாதிரியின் மூலம் எங்கு நமக்கு வழிகாட்டியுள்ளார்களோ அங்கு முஃமின்களுக்கு அறிவுரையும் கூறியுள்ளார்கள்.

ரமலான் இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கு காரணமாக அமைகின்ற அதே வேளையில் இறை வணக்கத்தை சரியாக செய்வதற்கும் பாவங்களை விட்டு விலகி இருக்கவும், மனிதர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதற்கும் முன்பை விட அதிக கவனமூட்டுகின்ற மாதமாகும். மேலும் இம்மாதம் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான மாதமும் ஆகும். இம்மாதத்தின் போது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நற்செயல்கள் வழக்கத்தை விட அதிகமாகி விட்டது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பொருள் தியாகம் மற்றும் சதகா கொடுப்பதில் மிக அதிக வேகத்தைக் காட்டினார்கள். பொதுவான நாட்களின் போதும் அதிகமாக சதகா கொடுத்து வந்தார்கள். இதற்கும் எவரும் போட்டி போட முடியாது. ஆனால் ரமலானில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தியாகம் புயலை விட வேகமாக இருந்தது என்று சஹாபாக்கள் கூறுகின்றனர். அதேபோன்று இறைவணக்கங்களிலும் மிகவும் ஈடுபாடு காட்டினார்கள்.

பொதுவாக மக்கள் இவ்வாறு கூறுவதுண்டு. அதாவது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்த நன்மைக்கு யாராலும் போட்டிபோட முடியாது. இருந்தும் இறைவன் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுமாறு கட்டளையிட்டுள்ளான். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்த அளவு நம்மால் நன்மை செய்ய முடியாது. அவர்கள் பெற்ற உயரிய பதவிகளை நம்மால் அடைய முடியாது. எனவே அவர்களை பின்பற்ற வேண்டியது இல்லை என்றால், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நமக்கு எவ்வாறு முன்மாதிரி ஆக முடியும்?

அல்லாஹ் ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனியான திறன்களை வழங்கியுள்ளான். இக்கருத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார்கள். ஒவ்வொருவரும் தத்தமது திறமைக்கு ஏற்ப சக்தியைப் பயன்படுத்த வேண்டும். இறைவன் எல்லாருடைய சக்தியையும் திறனையும் நன்கு அறிகிறான். இறைவன் மனிதனுடைய சக்திக்கு அப்பாற்பட்ட சுமைகளை சுமத்துவதில்லை. இந்த நபியின் முன்மாதிரி உங்கள் முன்னால் உள்ளது. நீங்கள் அதை பின்பற்ற வேண்டும். நீங்கள் பின்பற்றியதற்கேற்ப உங்களுக்கு நற்கூலி கிடைக்கும் என்று இறைவன் கூறுகிறான். இங்கு நாம் ஒரு விஷயத்தை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். அதாவது ஒவ்வொருவரும் தத்தமது திறமைகளை தாமே நிர்ணயம் செய்து கொள்ள முடியாது. மாறாக யாருக்கு எவ்வளவு திறமை இருக்கிறது என்பதை இறைவனே நன்கு அறிகிறான். மனிதன் தன்னால் முடிந்த வரை முயற்சி செய்ய வேண்டும். பிறகு கூலியை இறைவனது பொறுப்பில் விட்டு விட வேண்டும். ஜிஹாது – விடாமுயற்சி செய்வதுதான் ஒரு முஃமினுடைய வேலையாகும்.

ஜிஹாது என்பதன் பொருள், தனது எல்லா திறமைகளையும் பயன்படுத்தி விடா முயற்சி செய்தல் என்பதாகும். ஒரு குறிப்பிட்ட பணியில் மனிதன் தனது எல்லா திறமைகளையும் ஆற்றல்களையும் பயன்படுத்தி முற்றிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுவது தான் ஜிஹாத் ஆகும்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: **நம்மை சந்திக்க முயற்சி செய்பவர்களுக்கு நாம் நிச்சயமாக நம்மிடம் வருவதற்கான வழியைக் காட்டுவோம். (29:70)**

இங்கு இறைவன் ஜாஹதூ என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளான். இதன் மூலம் இறைவனை அடைவதற்கு விடா முயற்சி மிகவும் அவசியம் என்ற கருத்தை வலியுறுத்திக் கூறியுள்ளான். இவ்வாறு விடாமல் முயற்சி செய்து களைப்படைந்து விடுகிற மனிதனை இறைவன் தானே முன் வந்து கட்டி அணைத்துக் கொள்கிறான். என்னை அடைவதற்காக நீங்கள் முழு முயற்சியுடன் பாடுபடுங்கள் என்று இறைவன் கட்டளையிட்டு விட்டான். ஆனால் இறைவனின் ஒரு பண்பு கருணையாளன் என்பதாகும். எனவே தனது ரஸூல் (ஸல்) அவர்களிடம் இறைவன் இவ்வாறு கூறுமாறு கட்டளையிட்டுள்ளான். முஃமின்கள் என்னை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால் நான் அவர்களை நோக்கி இரண்டு அடி எடுத்து வைக்கிறேன். அவர்கள் நடந்து வந்தால் நான் ஓடி வருகிறேன் என்று கூறுகிறான். ஆக, எவ்வாறு இருப்பினும் மனிதனின் முயற்சிகள் எல்லாம் வெறும் பெயரளவிலான முயற்சிகள்தான். நமது அன்பிற்குரிய இறைவன் மிகவும் கருணையாளன் ஆவான். எனது கட்டளைக்கு ஏற்ப என் அடியான் என்னை அடைவதற்காக ஒரு அடி தான் இப்போது எடுத்து வைத்திருக்கிறான் என்று அறிந்த இறைவன் அவன் பக்கம் வருகின்ற தூரத்தை குறைத்துக் கொண்டே செல்கிறான். இவ்வாறு அந்த பலவீனமான மனிதன் இறைவனின் அடியான் ஆக வேண்டும் என்ற விருப்பத்துடன் வருகின்ற போது இறைவன் அவரை தன் நெஞ்சோடு அணைத்துக் கொள்கின்றான்.

அல்லாஹ் தன்னை நோக்கி வருகின்ற ஒருவரை காணும் போது ஒரு தாய் தன் தொலைந்து போன பிள்ளையைக் கண்டு எவ்வளவு மகிழ்ச்சியடைவாளோ அவ்வளவு மகிழ்ச்சி அடைகின்றான். இது இறைவனின் அளப்பெரும் கருணையாகும். இல்லை என்றல் மனிதனுடைய முயற்சியால் இறைவனை அடைவது என்பது எவ்வாறு சாத்தியமாகும். இறைவனின் எல்லையில்லா கருணையின் விளைவாகத்தான் மனிதன் இறைவனை அடைகிறான்.

நான் கூற வந்த கருத்தின் பக்கம் மீண்டும் வருகிறேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவனின் கட்டளைகளைப் பேணுவதில் பூரணமான நிலை கொண்டவர்களாக திகழ்ந்தார்கள். ரமலானில் இறைகட்டளைகளைப் பேணுவதில் அசாதாரணமான முறையில் ஈடுபட்டிருந்தார்கள். பொதுவான நாட்களிலும் இறைவனின் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதிலும், இறை படைப்பினங்களுக்கு சேவை செய்வதிலும் ஈடுபட்டிருப்பார்கள். இந்த நிலையை நாம் வேறு யாரிடமும் காண முடிவதில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கொண்டிருந்த இறைவணக்கத்தின் உயர்ந்த நிலை மற்றும் அவர்களின் நல்லொழுக்க மேன்மைக்கு ஒரு சில உதாரணங்களை நான் இப்போது உங்கள் முன் வைக்கிறேன்.

ஒரு நபிமொழி அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஒருமுறை குதிரையிலிருந்து கீழே விழுந்ததன் காரணமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உடலின் ஒரு பகுதி மிகவும் காயமடைந்தது. நின்று கொண்டு தொழ முடியவில்லை. எனவே உட்கார்ந்தவாறு தொழ வைத்தார்கள். ஆனால் இந்த முடியாத சூழ்நிலையிலும் ஜமாஅத்தாக தொழுவதை அவர்கள் கைவிடவில்லை.

பிறகு உஹதுப் போரின் போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்களின் ஈட்டி அல்லது அம்பு பட்டதன் காரணமாக தலையில் படுகாயமடைந்தார்கள். மிகவும் வேதனையுற்றார்கள். அப்போதும் பாங்கு சப்தம் கேட்டவுடன் பிற நாட்களில் எவ்வாறு தொழுகைக்காக பள்ளிவாயிலுக்கு வருவார்களோ அவ்வாறே பள்ளிவாயிலுக்குள் வந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தொழுகையின் அழகை இவ்வாறு படம்பிடித்துக் காட்டுகிறார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொழுத தொழுகைகளின் அழகை என்னால் வர்ணிக்க வார்த்தைகளே இல்லை என்று கூறுகிறார்கள். இறைவணக்கத்திற்கான மிக அழகிய முன்மாதிரியை நிலைநாட்டிய ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் முழுமையான அடியாராவார்கள். இவர்களின் இறைவணக்கத்தில் காணப்பட்ட அழகு சஹாபாக்களின் இபாதத்திலும் அழகூட்டி விட்டது. என்னுடைய கட்டளைகளை பேணி நடந்தால் தான் நான் எனது நெருக்கத்தை உங்களுக்கு வழங்குவேன் என்று இறைவன் கூறுகிறான். இதனை செயல்படுத்துவதற்கான முதல் படித்தரம், நாம் நமது இபாதத்தில் கவனத்துடன் இருப்பது ஆகும். இறைவணக்கத்தை இன்றைய தினங்களில் ரமலான் மாதமாக இருப்பதால் மட்டும் ஆர்வத்துடன் பேணுதல் கூடாது. மாறாக நாம் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் பார்க்கிறோம். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சாதாரண நாட்களில் மட்டுமல்லாது போர் நேரங்களிலும் நோயுற்றிருந்த போதும் இறை வணக்கங்களை முறைப்படி நிறைவேற்றுவதை மறக்கவில்லை.

தொழுகையை சரியாக நிறைவேற்றுவது முஃமின்களின் ஒரு அடையாளமாகும். முஃமின்கள் தொழுகையின் நேரங்களில் ஒன்றுகூடுகிறார்கள் என்று இறைவன் கூறுகிறான். முழுமையான இறை அடியாராகத் திகழ்ந்த ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்த்து இறைவன் கூறுகிறான்.

(நபியே நீர் கூறுவீராக!) என் தொழுகையும், என் தியாகமும், என் வாழ்வும், என் மரணமும் எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியன. (6:163)

இந்த உயர்ந்த சிறப்புகளைப் பெற்ற ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவனின் கட்டளைகளில் இருந்து எவ்வாறு முகம்திருப்பி இருப்பார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது இறுதி நோயின் போது அவர்களால் நடக்கக்கூட முடியவில்லை. சஹாபாக்களின் உதவியோடு பள்ளிக்கு வந்தார்கள். ஆக இவை அனைத்தும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவனின் மீது கொண்ட நேசத்தில் தம்மையே மாய்த்துக் கொண்டதன் காரணமாக அவ்வாறு செய்தார்கள்.

எனவே நேசம் அதிகமாகும் போதுதான் ஈமானில் உயர்வும் நற்செயல்கள் செய்யும் ஆர்வமும் பிறக்கும். நேசத்தில் முன்னேறுவதற்கான முன்மாதிரி இப்போது உங்கள் முன் இருக்கிறது. இறைவன் எங்கே? என்று நீங்கள் கேட்கிறீர்கள். அல்லாஹ்வை இந்த இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் நீங்கள் காணலாம். இதன் மூலம் நீங்கள் என்னுடைய உண்மையான அடியார் ஆவதற்கு முயற்சி செய்யுங்கள். அவ்வாறு செய்தால் நீங்கள் என்னை உங்களுக்குப் பக்கத்தில் காணலாம். ரமலான் மாதத்தில் மட்டும் நீங்கள் பள்ளிவாயிலை நிறைத்து விட்டு பின்னால் என்னை மறந்து விட்டால் அல்லது இன்றைய நாட்களில் உங்களுக்கு கஷ்டமும் துன்பமும் அதிகமாக இருப்பதால் நீங்கள் ஒருவருக்கொருவர் பள்ளிவாயிலுக்கு வருவதில் முந்திக் கொள்கிறீர்கள். இந்த நிலை மாறி சுகமான காலகட்டம் வந்த பிறகு என்னை மறந்து விட்டால் எனது கட்டளைகளை பேணி நடப்பவர் ஆகமாட்டீர்கள். மாறாக, நீங்கள் உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுபவர்கள் ஆவீர்கள். உங்களுக்கு நேர்ந்துள்ள இந்த கஷ்டம், துன்பங்கள், இக்கட்டான காலகட்டம், உணர்வு, ரமலானின் பொதுவான ஆன்மீக சூழ்நிலை எல்லாம் முடிந்து விட்டாலும் சூழ்நிலைகள் மாறினாலும் நீங்கள் என்னுடைய ரஸுல் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படி செயல்பட்டவாறு உங்களுடைய இபாதத்துகளையும் நற்செயல்களையும் அமைத்துக் கொள்ள முயற்சி செய்தவாறு நிரந்தரமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நீங்கள் என்னுடைய கட்டளைகளுக்கு செவி கொடுப்பவர்கள் ஆவீர்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.

சூழ்நிலைகள் கடினமாக இருப்பதால் நம்முடைய இறைவணக்கமும் அதிகமாக இருக்கிறது. இன்றைய நாட்களில் பாகிஸ்தானின் சூழ்நிலை முழு உலக அஹ்மதிகளையும் இறைவணக்கத்தின் பக்கம் கவனத்தை அதிகமாக ஈர்த்துள்ளது. நம்மில் பலருக்கு இறைவனின் நெருக்கத்தின் காரணமாக ஆறுதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் **நான் அருகில் உள்ளேன் (2:187)** என்று இறைவன் கூறியுள்ள வாக்குறுதி

நிறைவேறியதைக் கண்கூடாக கண்டுள்ளார்கள். பாகிஸ்தானில் நிலவுகின்ற கடினமான சூழ்நிலைக்குப் பின்னர் இரண்டு ஜல்ஸாக்கள் நடந்துள்ளன. இன்னும் அதே சூழ்நிலை நீடித்து வருகிறது. இப்போது ரமலான் வந்து விட்டது. இம்மாதம் இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கும், துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான மாதமாகும். இப்போது நாம் எங்கு நம்முடைய இபாதத்துகளை முழுமைப்படுத்த அதிக முயற்சி செய்கின்றோமோ அங்கு நம்முடைய இந்த நிலை நம்மில் நிரந்தரமாக காணப்பட வேண்டும் என்றும் துஆ செய்ய வேண்டும். ரமலான் மாதம் முடிந்த பிறகு இந்த சூழ்நிலை மாறிய பிறகு நாம் மீண்டும் நம்முடைய பலவீன நிலையின் பக்கம் திரும்பி விடக் கூடாது. ஜல்ஸாவில் நம்மிடம் தோன்றிய நல்ல மாற்றங்கள் ரமலான் மாதத்தில் இன்னும் பொலிவு பெற்றுவிடும் என்ற உணர்வு அஹ்மதிகளிடம் காணப்படுகிறது. மேலும் நம்மிடம் தோன்றிய இந்த நல்ல மாற்றங்கள் தற்காலிக மாற்றங்களாக இருக்கக் கூடாது. மாறாக இது நிரந்தரமான மாற்றமாக இருக்க வேண்டும். நாம் இறைவனின் உண்மையான அடியார்களாக இருந்து நமது இறைவணக்கத்தின் நிலையை உயர்த்திக் கொண்டிருக்க வேண்டும். நாம் நமது துஆவின் மூலமும் இபாதத்துகளின் மூலமும் நற்செயல்களின் மூலமும் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும். இதன் தொடர் எப்போதும் முடிவடையாமல் இருக்க வேண்டும். நமது இபாதத்துகளின் நிலை உயர்ந்து கொண்டே செல்ல வேண்டும். நமது இறையச்சத்தின் நிலையும் உயர்ந்து கொண்டே செல்ல வேண்டும்.

இந்த நிலையைப் பெறுவதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் நமக்கு ஒரு வழியைக் கற்றுத் தந்துள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எல்லாவற்றிற்கும் மேலான துஆ மனிதன் தன் பாவத்திலிருந்து தூய்மை அடைவதற்கு துஆ செய்வதாகும். எல்லா துஆக்களின் ஆணி வேர் இந்த துஆவாகும். ஏனென்றால் இந்த துஆ நிறைவேறி விட்டால் மனிதன் எல்லா விதமான அசுத்தத்தில் இருந்தும் பாவங்களிலிருந்து இறைவனின் பார்வையில் தூய்மை அடைந்து விட்டால் மனிதன் தன் சுய தேவைகளுக்காக செய்கின்ற பிற துஆக்களைக் கேட்க வேண்டிய அவசியம் கூட ஏற்படாது. மனிதன் பாவங்களிலிருந்து தூய்மை அடைவதற்காக செய்யும் துஆ தான் மிகவும் கடின உழைப்பு செய்ய வேண்டிய துஆவாகும்.

அதாவது இது மிகவும் கடினமான ஒன்றாகும் என்று கூறுகிறார்கள். இதற்காக மிகவும் கடின உழைப்பு தேவை. ஆனால் இதுவே மிகவும் முக்கியமான மற்றும் அடிப்படையான துஆவாகும். மனிதன் தன் பாவங்களை விட்டு விலக முயற்சி செய்தால்தான் இறைவனின் கட்டளையை பேணுபவன் ஆக முடியும்.

திருக்குர்ஆன் இறைவனின் கட்டளைகளால் நிரம்பியுள்ளது. அவைகளின் படி நாம் செயல்பட்டால்தான் இறைவனின் கட்டளைகளை நாம் பேணி நடப்பவர்கள் என்று நம்மை கூற முடியும். அப்போதுதான் நாம் நம்மை பாவங்களிலிருந்து தூய்மையாக இருக்க முயற்சி செய்பவர்கள் என்று கூற முடியும். திருக்குர்ஆனில் இறைவனின் கட்டளைகள் பல உள்ளன. அவை அனைத்தையும் ஒரே அமர்வில் கூறிவிட முடியாது. ரமலான் மாதத்தில் திருக்குர்ஆன் ஓதுவதன் பக்கம் நமக்கு அதிக கவனம் இருக்கும். தர்ஸ் கேட்பதன் பக்கம் அதிக கவனம் இருக்கும். அந்த நேரத்தில் இறைவனின் இந்த கட்டளைகளை சிந்திக்க முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் அவர்கள் வாழ்ந்து காட்டிய முன்மாதிரிகளில் ஒரு சில சம்பவங்களை இப்போது நான் உங்கள் முன் வைக்கிறேன்.

இறைவன் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

**உங்கள் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். நிச்சயமாக ஒவ்வொரு உடன்படிக்கை குறித்தும் விசாரிக்கப்படும். (17:35)**

இந்த இறை கட்டளையை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு பேணி நடந்தார்கள் என்று பாருங்கள்.

**ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா பின் யம்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:**

நானும் என்னுடைய நண்பர் அபூ சுஹைல் ஆகிய இருவரும் வீட்டிலிருந்து வெளியே வந்தோம். அப்போது மக்கத்து குறைஷிகள் எங்களைப் பிடித்து விட்டார்கள். நீங்கள் முஹம்மதிடமா செல்கிறீர்கள் என்று கேட்டார்கள்? அதற்கு நாங்கள் மதீனாவிற்கு போகிறோம் என்று கூறினோம். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோடு சேர்ந்து போர் செய்யமாட்டோம் என்று எங்களிடம் உடன்படிக்கை வாங்கினார்கள். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நாங்கள் சந்தித்த போது நடந்ததைக் கூறினோம். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சரி, நீங்கள் சென்று உங்கள் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். நாம் எதிரிகளுக்கு எதிராக இறைவனிடம் துஆவின் மூலம் உதவி கேட்போம் என்று கூறினார்கள். இந்த காரணத்தினால் நாங்கள் இருவரும் பத்ர் போரில் கலந்து கொள்ள முடியாமல் போய் விட்டது.

இந்த சம்பவத்தின் போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முஸ்லிம்கள் அனைவரும் தேவைப்பட்டார்கள். குஃப்பார்களின் படை முழுமையான ஆயுதத்தோடு அதிக எண்ணிக்கையில் திரண்டிருந்தது. அவர்களுக்கு எதிராக முஸ்லிம்களின் படை ஏறக்குறைய நிராயுதபாணியாக இருந்தது. ஆனால் அந்த சூழ்நிலையிலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த இரண்டு தோழர்களிடம், நீங்கள் குஃப்பார்களிடம் வாக்குறுதி கொடுத்துள்ளீர்கள். எனவே உங்கள் வாக்குறுதியைக் காப்பாற்றுங்கள். போரில் கலந்து கொள்ள வேண்டாம். நான் துஆவின் மூலம் இறைவனிடம் உதவி கேட்பேன் என்று கூறினார்கள். பின்பு அந்த போரின் விளைவை முழு உலகமும் பார்த்தது. அதை வரலாறு பதிவு செய்துள்ளது. எதிரிகள் கூட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உடன்படிக்கையைப் பேணுவார்கள் என்று நம்பினார்கள். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோ இறைவனையே முழுமையாக நம்பினார்கள். எனவே இறைவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எப்போதும் அருகில் இருந்தான். இறைவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் துஆவை ஏற்றுக் கொண்டு முஸ்லிம்களுக்கு எதிராக ஆயுதங்கள் ஏந்தி முழு பயிற்சியுடன் நின்ற குறைஷிகளின் படையை தோற்கடித்து மிகவும் தெளிவான பிரகாரசமான வெற்றியை முஸ்லிம்களுக்கு வழங்கினான். நான் துஆவின் மூலம் இறைவனிடம் உதவி கேட்பேன் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல) அவர்கள் மிகவும் உறுதியோடு கூறினார்கள். அந்த உறுதிக்கு இறைவன் நல்ல பலனை வழங்கினான். இதன் மூலம் சஹாபாக்களின் ஈமானை இன்னும் உறுதியாக்கி விட்டான்.

மக்கா வெற்றியின் போது ஒரு பெண்மணி எதிரி ஒருவருக்கு தஞ்சம் வழங்குவதாக வாக்களித்திருந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உம்மு ஹானியே! நீர் தஞ்சம் அளித்தவருக்கு நாமும் தஞ்சம் அளித்தோம் என்று கூறினார்கள். ஒரு ஈமான் கொண்ட பெண்மணி வாக்களித்ததன் காரணமாக அதை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காப்பாற்றினார்கள். அந்த எதிரிக்கு தஞ்சம் அளிப்பதை மக்கள் எதிர்த்தார்கள். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நீங்கள் வாக்குறுதி அளித்ததன் காரணமாக உங்கள் வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் என்று கூறி மிக உயரிய சிந்தனையை நிலைநாட்டினார்கள்.

இன்றைய நாட்களில் சின்னச் சின்ன விஷயங்களில் கூட வாக்குறுதியையும் உடன்படிக்கையையும் மக்கள் மீறுவதை நாம் பார்க்கிறோம். இதன் விளைவாக சமூகத்தின் அமைதி கெட்டு விடுகிறது. பிறர் இதை அதிகமாக செய்கிறார்கள் என்றாலும் அஹ்மதிகளிடமும் ஒரு சில நேரம் இந்த தவறு நேர்ந்து விடுகிறது. வாக்குறுதியை மீறுவது மட்டுமின்றி இதற்காக பொய்யையும் துணைக்கு வைத்துக் கொள்கிறார்கள். பிறகு வழக்கு தொடரப்படுகிறது. அல்லது பிரச்சனைகள் வலுக்கின்றன. இதில் ஒன்று வாக்குறுதி மீறப்படுகிறது. பிறகு பொய்யும் சொல்லப்படுகிறது. இது மனிதனை இறை அடியான் என்ற பண்பிலிருந்து விலக்கி விடுகிறது. இறைவன் பொய்யையும் ஷிர்க்கையும் சமம் என்றே கூறுகிறான்.

இறைவன் கூறுகின்றான்: **நீங்கள் சிலை வணக்கமான இணை வைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். பொய் பேசுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள். (22:31)**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆன் பொய்யை (நஜாஸத்) அசுத்தம் என்றும் பெரும் பாவம் என்றும் கூறுகிறது. மேற்கண்ட வசனத்தில் பொய்யை சிலை வணக்கத்திற்கு நிகராக இறைவன் கூறியுள்ளான். ஏனென்றால் பொய்யும் ஒரு வகையில் சிலை ஆகும். இல்லை என்றால் மனிதன் ஏன் உண்மையை கைவிட்டு விட்டு பொய்யை நாடுகிறான்? சிலை வணக்கத்திற்கு உறுதுணையாக எந்த சத்தியமும் இருப்பதில்லை. பொய்யில் ஏமாற்றுதலைத் தவிர வேறு எதுவும் இருப்பதில்லை. பொய் சொல்பவர்கள் உண்மையைக் கூறினாலும் அது நம்பத் தகுந்ததாக கருதப்படுவதில்லை. அவர்கள் எதை கூறினாலும் இதிலும் பொய் கலந்திருக்குமோ என்ற சந்தேகம் உருவாகிறது.

எனவே மனிதன் தன் விஷயத்தில் பொய்யை கலந்து விடுகிற போது இறைவன் அவரை இணை வைப்பவருக்கு நிகராக ஆக்குகின்றான். இணை வைக்கின்ற ஒருவர் தான் இறைவனின் அடியார் என்று தன்னை ஒருபோதும் கூற முடியாது. எனவே இது மிகவும் அச்சத்திற்குரிய நிலையாகும். சின்னச் சின்ன விஷயத்தை திரித்துக் கூறுவது பொய் ஆகாது என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் இதுவும் பொய் ஆகும்.

ஒருவர் தான் கேள்விப்பட்டது எல்லாவற்றையும் பிறரிடம் கூறித் திரிவது அவர் பொய்யர் என்பதற்கு போதுமானதாகும் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆக இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கு இவ்வாறான நுட்பமானவற்றையும் பேணி நடத்தல் வேண்டும். இதுதான் இறைவனின் அடியாராக நம்மை ஆக்குகின்றன. நோன்பைப் பற்றியும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நமக்கு சிறப்பாக கவனமூட்டியுள்ளார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

பொய் பேசுவதையும் அதன்படி செயல்படுவதையும் கைவிடாதவர் பட்டினியும், பசியும், தாகத்தோடும் இருப்பதை அல்லாஹ் பொருட்படுத்தமாட்டான்.

இன்னொரு அறிவிப்பு இவ்வாறு வருகிறது. நோன்பு கேடயமாகும். இதை பொய் மற்றும் புறம் பேசுவது ஆகியவற்றைக் கொண்டு உடைக்காதீர்கள் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஈமான் கொண்ட ஒருவர் தான் நோன்பு நோற்று, அதில் பொய் கலந்து விட்டால் ஈமான் போய் விடுகிறது. இறைவனுக்காகத்தான் நோன்பு நோற்கப்படுகிறது. பொய் சொன்னால் இறைவன் விலகி விடுகிறான். அந்த இடத்தில் ஷிர்க் வந்து விடுகிறது. இது நோன்பின் போது கூறப்பட்டவைதான் என்றாலும் திருக்குர்ஆனில் இறைவன் ஷிர்க்கிற்கு ஒப்பாக பொய் உள்ளது என்று கூறியுள்ளான்.

எனவே ரமலான் மாதத்தில் நாம் இதை கவனத்தில் கொள்ள வேண்டும். இதில் நாம் நமது குறைபாடுகளையும் பலவீனங்களையும் போக்க முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் இறைவனின் உண்மையான அடியாராக முடியும். ஈமானில் உறுதியின் பால் அடியெடுத்து வைக்க முடியும். அல்லாஹ்வின் கட்டளைகளைப் பேணுபவர்கள் ஆக முடியும். **நான் உங்களுடன் இருக்கிறேன்** என்ற அல்லாஹ்வின் குரலைக் கேட்க முடியும். திருக்குர்ஆனில் இறைவன் சமூகத்தின் உரிமைகளையும் கடமைகளையும் மிகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கையிலும் இதற்குரிய நுட்பமானவைகள் நமக்கு தென்படுகின்றன.

உதாரணமாக, உறவுளைப் பேணுவது ஒரு சமூக உரிமையாகும். சிலர் உறவுகளைப் பேணுவதில்லை. ஒவ்வொரு நிகாஹ்வின் போதும் இது தொடர்பான ஒரு வசனம் ஓதப்படுகிறது. உறவுகள்

என்பது ஒரு தரப்பு சம்பந்தப்பட்டது இல்லை. மாறாக இரண்டு தரப்பும் சம்பந்தப்பட்டதாகும். பெண் மற்றும் மாப்பிள்ளை ஆகிய இரு சாராரும் உறவினர் ஆகிறார்கள். உறவுகளுக்குரிய உரிமையை சரியாக பேணி வந்தால் இதில் ஏற்படுகின்ற பல பிரச்சனைகள் தீர்ந்து விடும். உறவுகளில் ஏற்படுகின்ற பிரச்சனைகள் இப்போது அதிகமாகிக் கொண்டே செல்கிறது. இன்றும் உறவு முறைகளில் ஏற்படுகின்ற விரிசலுக்கு பெரிய காரணம் இதுவாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இரத்த உறவைப் பேணுயது மட்டுமின்றி பால் குடி உறவையும் அதிகமாக மதித்தார்கள்.

எனவே இன்றைய நாட்களில் காணப்படுகின்ற குழப்பங்களுக்கு இந்த முன்மாதிரியை பேணுவது மிகவும் அவசியமாகும். உறவு முறைகளில் விரிசல் அடைவது வீடுகள் பிளவுபடுவதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. பெரும்பாலும் ஒருவர் மற்றவரின் உறவை மதிக்காத காரணத்தால் கணவன் மனைவிக்கு மத்தியில் பிளவு ஏற்படுகிறது. இறைவன் கூறுகிறான்: எனது அடியாராக இருப்பதற்கான பலனை பெற வேண்டும் என்றால் இபாதத்துகளை சரியாக நிறைவேற்ற வேண்டும்; உயர்ந்த நல்லொழுக்கத்தைப் பேண வேண்டும். என்னுடைய அடியார்களுக்கு உள்ள உரிமையையும் நிறைவேற்ற வேண்டும் என்று இறைவன் கூறுகிறான். இதற்கான முன்மாதிரியை இறைவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வடிவில் நமக்கு வழங்கியுள்ளான். அந்த முன்மாதிரியை பேணி வந்தால் நாம் இறைவனின் அடியாராக ஆகலாம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்தக் கருத்தை நமக்கு ஓரிடத்தில் இவ்வாறு விளக்குகிறார்கள். இறைவன் கூறுகிறான்: நான் உங்களுக்கு அருகில் தான் இருக்கிறேன். நீங்கள் தான் என்னை விட்டு விலகியுள்ளீர்கள். எனவே உங்கள் செயல்களை சீர்திருத்தியவாறு என் அருகில் வாருங்கள். அப்போது என்னை உங்களுக்கு அருகில் காண்பீர்கள். இது இரண்டு தரப்பு சம்பந்தப்பட்டதாகும். இதிலும் முதல் முயற்சி மனிதன் தான் செய்ய வேண்டும்.

நாம் இந்தக் கருத்தைப் புரிந்து கொள்வதற்கு இறைவன் நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பாவத்திலிருந்து விலகுவதற்கு நமக்கு கவனமூட்டியுள்ளார்கள். அதன்படி இதற்காக துஆ செய்பவர்களாக நாம் இருக்க வேண்டும். இறைவனின் அருள் நம்மீது இறங்கட்டுமாக. நான் இறைவனின் நெருக்கத்தைப் பெற்ற அடியார்களாக இருக்க வேண்டும். ரமலான் மாதத்தில் பொதுவாக நாம் துஆ செய்து கொண்டுதான் இருக்கிறோம். மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். பாகிஸ்தானிற்காகவும், பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காகவும் குறிப்பாக துஆ செய்யுங்கள். இறைவன் எப்போதும் நம்மை தன்னுடைய கருணை என்ற போர்வையில் வைப்பானாக. எதிரிகளின் எல்லா சூழ்ச்சிகளையும் மண்ணோடு மண்ணாக்குவானாக. ஜமாஅத்தை ஒரு சிறப்பான பாதுகாப்பில் வைப்பானாக. இறைவன் தனது அற்புதத்தின் மூலம் தனது வல்லமையைக் காட்டுவானாக. இறைவனின் பார்வையில் தீயவர்களாக இருப்பவர்களை இறைவன் அழித்து விடுவானாக. பாகிஸ்தான் தலைவர்களுக்கு பாகிஸ்தானின் நிலை எதை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்று புரிவதில்லை. இதன் விளைவு என்னவாகும் என்பது இவர்களுக்கு இன்னும் புரியவில்லை. அல்லாஹ்தான் இவர்களுக்கு கருணை காட்ட வேண்டும். இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தில் முன்னேற்றத்தை முன்பை விட அதிகமாக காட்டுவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 13.08.2010**

Translated by : **Maulavi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**